**ARTICLE 10 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00045**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 50–55
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# கு.அழகிரிசாமியின் "ராஜா வந்திருக்கிறார்"சிறுகதையில் பண்பாட்டுப் பதிவுகள்

**முனைவர்.உமாராணி க**[1,*]

[1]உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி திருச்சிராப்பள்ளி-620002., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.உமாராணி க — umaranisrc2016@gmail.com
**ORCID:** முனைவர்.உமாராணி க https://orcid.org/0000-0003-4319-2922

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்கால இலக்கியம் என்ற இலக்கிய வகைப்பாட்டில் சிறுகதை இலக்கியம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. சிறுகதை எழுத்தாளர்களில் எளிய நடையில் அழகு தமிழில் சிறுகதைகளை வார்த்தெடுத்த பெருமைக்குரியவர் கு.அழகிரிசாமி ஆவார். இவரின் "ராஜா வந்திருக்கிறார்" சிறுகதை ஏழ்மையிலும் மனிதநேயம், தாய்மை, விருந்தோம்பல், பகிர்ந்துண்ணுதல் போன்ற உயரிய தமிழர் பண்பாடுகளை எடுத்துரைக்கும் சிறந்த படைப்பாகும். எளிய நடையிலும் ஆழ்ந்த உணர்வுகளுடனும் அமைந்துள்ள இக்கதையில் தாயம்மாள், தன் பிள்ளைகளுடன் பெற்றோரற்ற சிறுவன் ராஜாவையும் அன்போடு அரவணைத்து, உணவு, உறைவிடம், உடை ஆகியவற்றை வழங்குகிறாள். குறிப்பாக, பசியால் எச்சில் இலைகளில் சோற்றுப் பருக்கைகளை உண்ணும் சிறுவனின் நிலை வறுமையின் கொடுமையை வெளிப்படுத்துகிறது. அவனைத் தன் பிள்ளையாகக் கருதி உணவளித்து, தீபாவளியன்று தன் கணவனுக்காக இருந்த புத்துண்டையும் வழங்கும் தாயம்மாளின் செயல், "விருந்தோம்பல்", "பகுத்துண்டு வாழ்தல்", "பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதுதல்" போன்ற தமிழர் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்துகிறது. மேலும், தன் செயல்களின் வழியாகவே பிள்ளைகளுக்கு மனிதநேயம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைக் கற்றுத் தருகிறாள். இவ்வகையில், "ராஜா வந்திருக்கிறார்" சிறுகதை தாய்மையின் பெருமையையும் விருந்தோம்பலின் சிறப்பையும் எடுத்துரைப்பதோடு, ஏழ்மையிலும் பிறருக்கு உதவும் உயர்ந்த உள்ளம் கொண்ட வாழ்வியல் நெறியைப் பதிவு செய்யும் பண்பாட்டுச் சிறுகதையாகத் திகழ்கிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** சிறுகதை; விருந்தோம்பல்; பண்பாட்டு விழுமியங்கள்; மனிதநேயம்; சமத்துவம்; சகோதரத்துவம்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, மு. (2026). கு.அழகிரிசாமியின் "ராஜா வந்திருக்கிறார்"சிறுகதையில் பண்பாட்டுப் பதிவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

செம்மொழியான தமிழ்மொழியில் காலந்தோறும் படைக்கப்படுகின்ற இலக்கிய வளங்கள் யாவும் மொழியின் செழுமையை உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டே வருகின்றன. இறையனார் அகப்பொருள் உரையில் தொடங்கி இக்கால இலக்கியம் வரை பல்வேறு இலக்கியப் படைப்புகள் உருவாகிக்கொண்டே வருகின்றன. புத்திலக்கியங்களும், புனைகதைகளும் தமிழன்னைக்கு பெருமை சேர்க்கின்றன.

இணையத்திலும் தமிழ்மொழி ஈடில்லா சிறப்புடன் வலம் வருகின்றது. மக்களின் யதார்த்த வாழ்க்கையினைப் பிரதிபலிக்கின்ற வகையில் சிறுகதை படைப்பாளர்களால் படைக்கப்பட்ட எழுத்தோவியங்கள் மனதிற்கு இலக்கிய இன்பத்தை அள்ளி வழங்குகின்றது. அவ்வகையில் எழுத்தாளர் கு.அழகிரிசாமி அவர்களின் சிறுகதைகள் எளிய நடையில் ஆழ்ந்த பொருளில் சுவைபட படைக்கப்பட்டுள்ளன. இவர்தம் “ராஜா வந்திருக்கிறார்” சிறுகதையில் இடம்பெறுகின்ற பண்பாட்டுப் பதிவுகளை இக்கட்டுரையில் காண்போம்.

## பிறப்பும் கல்வியும்

தமிழ்நாட்டின் இன்றைய தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கும் கயத்தாறுக்கும் இடையில் உள்ள இடைசெவல் என்னும் சிற்றூரில், குருசாமி-தாயம்மாள் ஆகியோருக்கு முதல் மகனாக 23 செப்டம்பர் 1923 அன்று பிறந்தார்.

வசதியின்மை காரணமாக அவரை நான்காவது வரைகூட படிக்க வைக்க அவரது பெற்றோரால் முடியவில்லை. ஆனால், விடாமுயற்சியுடன் பத்தாம் வகுப்பு வரை படித்து முடித்தார். அந்தச் சிற்றூரில் பத்தாம் வகுப்பு வரை படித்தவர் என்ற பெருமை அவருக்கு உண்டு. பள்ளிப் படிப்பைவிட அவர் அனுபவத்தில் பெற்ற அறிவே அதிகம் எனலாம்.

ரஷ்ய எழுத்தாளர் கார்க்கியின் எழுத்து அவரை மிகவும் கவர்ந்தது. கார்க்கியின் நூலை முதன் முதலில் தமிழாக்கம் செய்தவர் இவர்தான். தமிழ் இலக்கியங்களுடன் மேல்நாட்டு இலக்கியங்களையும் படித்தார். பழைய பாடல்களுக்கு உரை எழுதும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார்.

## இதழாசிரியர் பணி

அரசுப் பணியில் சேரத் தேர்வு பெற்றதால், சார்பதிவாளர் அலுவலகத்தில் முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தில் எழுத்தர் உத்தியோகம் கிடைத்தது. ஆனால், நாள்தோறும் பத்திரங்களைப் பதிவது அவருக்குப் பிடிக்கவில்லை. அந்த எழுத்தர் உத்தியோகத்தில் மனநிறைவு ஏற்படவில்லை. அதனால் சென்னைக்கு வந்து, முதல் கதையை வெளியிட்ட "ஆனந்த போதினி' பத்திரிகை அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தார். "பிரசண்ட விகடனி'ல் வெளிவந்த அவரது கதைகளைச் சமகால எழுத்தாளர்களான வல்லிக்கண்ணனும், புதுமைப்பித்தனும், தொ.மு.சி.ரகுநாதனும் பாராட்டினார்கள். பிரசண்ட விகடன் பத்திரிகை அலுவலகத்தை விட்டுவிட்டு "தமிழ்மணி' என்ற அரசியல் வார இதழில் சேர்ந்தார்.

"தமிழ்மணி' வார இதழில் அவர் சில காலம்தான் பணியாற்றினார். அதன் பிறகு வை.கோவிந்தன் வெளியிட்ட "சக்தி' மாத இதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். அதன் ஆசிரியராக இருந்தவர் தி.ஜ.ரங்கநாதன். கு.அழகிரிசாமியின் முற்போக்குச் சிந்தனையையும், ஆற்றலையும் கண்டுகொண்ட வை.கோவிந்தன், அழகிரிசாமிக்குச் சக்தி இதழிலும் பதிப்பகத்திலும் இடமளித்து, எழுதுவதற்கு வாய்ப்பளித்தார். அழகிரிசாமியின் முயற்சியால் வெளியான கம்பராமாயணம், காவடிச் சிந்து ஆகிய பதிப்புகள் அவருடைய ஆராய்ச்சித் திறனையும் மொழியாக்க ஆற்றலையும் வெளி உலகுக்குத் தெரியப்படுத்தின. "ராஜா வந்திருக்கிறார்'

என்ற அவரது கதை இந்திய மொழிகளிலும், ரஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த கதையாகும். மலேசியாவில் ஐந்தாண்டுகள் (1952-1957) பணியாற்றினார்.

## தமிழகத்தில் மீண்டும் எழுத்தாளர் பணி

1957-ஆம் ஆண்டு சென்னை திரும்பிய அவர், 1960-ஆம் ஆண்டு வரை காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். பிறகு "நவசக்தி' நாளிதழில் 1965 வரை பணியில் இருந்தார். "நவசக்தி' இதழில் இருந்த காலத்தில்தான் அவர் "கவிச்சக்ரவர்த்தி' என்ற வரலாற்று நாடகத்தை எழுதினார். அந்த நாடகம் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத்தந்தது. "நவசக்தி' நாளிதழ் பணியிலிருந்து விலகி, ஐந்தாண்டுகள் சுதந்திர எழுத்தாளராக இருந்தார். கடிதம் எழுதுவதை அவர் கடமையாகக் கொண்டிருந்தார். அவ்வாறு அவர் எழுதிய கடிதங்களை கி.ராஜநாராயணன் தொகுத்து, "கு.அழகிரிசாமி கடிதங்கள்' என்ற நூல் வெளிவந்துள்ளது. கு.அழகிரிசாமியின் சிறுகதைகள் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இறுதியாக "சோவியத் நாடு' ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். ஆனால், உடல்நிலை காரணமாக அவரால் முழுமையாக அந்தப் பணியில் தொடர முடியவில்லை.

## சிறுகதை வரலாற்றில் கு.அழகிரிசாமி

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் அழகிரிசாமி பதித்த தடம் வித்தியாசமானது; சிறப்பானது. அவரை, அவரது சிறுகதைப் படைப்புகள்தாம் முதன் முதலில் தமிழ் இலக்கிய உலகிற்கு அடையாளம் காட்டின எனலாம். கதைகளில் உள்ளடக்கம், அமைப்பு அனைத்திலுமே சிக்கலற்ற எளிமைத் தன்மை காணப்படுகிறது. மனித உணர்வுகளே இவரது கதைகளில் அடிநாதமாக ஒலிக்கின்றன. அவர் எழுதி அச்சில் வெளிவந்த சிறுகதைகள் 101 ஆகும். 1963ஆம் ஆண்டு **அழகிரிசாமி கதைகள்** என்ற பெயரில் அவருடைய முதல் தொகுதி வெளிவந்தது. பின்பு, பன்னிரண்டு தொகுதிகள் தமிழ்ப் புத்தகாலயம், தேன்மழைப் பதிப்பகம் என்பவை மூலம் வெளியிடப்பட்டன. முதலில் வெளிவந்த **அழகிரிசாமியின் கதைகள்** என்ற தொகுதியே, **அன்பளிப்பு** என்ற பெயரில் ஒன்றிரண்டு கதை மாற்றத்துடன் திரும்பவும் வெளியிடப்பட்டது. அவருடைய கதைகள் அனைத்தும் 1940களிலிருந்து 1970 வரையிலான சுமார் 30 ஆண்டுக் காலத்தில் வெளிவந்தவைகளாகும். அழகிரிசாமி தம் கதைகளில் பல்வேறு கதைமாந்தர்களைப் படைத்திருந்தாலும், குழந்தைகளைப் பல கதைகளில் கதை மாந்தர்களாகப் படைத்துள்ளார். கு.அழகிரிசாமி, தம் தாயின் மீது மிகுந்த பற்றுடையவர். தம் தாயையே அவர் சில கதைகளில் பாத்திரமாக்கியுள்ளார். **ராஜா வந்திருக்கிறார்** கதையில் தம் தாயார் **தாயம்மா**வை மிகப் போற்றியுள்ளார்.

“ராஜா வந்திருக்கிறார்” சிறுகதை

தமிழ்இலக்கிய வரலாற்றில் 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்த அழகிரிசாமியின் *அன்பளிப்பு* என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு 1970-இல், சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. இச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள “ராஜா வந்திருக்கிறார்” என்ற சிறுகதை ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்த மூன்று

பிள்ளைகளின் மனவுணர்வினைப் படம்பிடித்துக் காட்டுகின்ற வகையில் எளிய நடையில் உணர்வுப்பூர்வமான படைத்துள்ளார் ஆசிரியர்.

## கதைச்சுருக்கம்

தாயம்மாள் என்ற பெண்ணுடைய மூன்று பிள்ளைகள் செல்லையா, தம்பையா, மங்கம்மாள் ஆகியோர் ஆவர். இவர்களோடு பள்ளியில் ஒன்றாகப் படிக்கின்ற ராமசாமிக்கும் இவர்களுக்கும் எப்போதும் ஒரு போட்டி இருந்துகொண்டே இருக்கும். செல்லையாவுக்கும், ராமசாமிக்கும் புத்தகத்தில் உள்ள படங்களை ஒருவருக்கொருவர் காட்டி விளையாடுகின்ற படப்போட்டி நடக்கின்றது. இதில் செல்லையா தோற்றுபோய் விடுகிறான். மேலும் ராமசாமி தன்னிடம் சில்க் சட்டை இருப்பதாகவும், உங்களிடம் அது இருக்கா என்றும் மீண்டும் போட்டி போடுகிறான். அதற்கு மங்கம்மாள் எங்க அண்ணன் போட்டிருக்கும் சட்டை கெட்டியானது. சில்க் சட்டை சருகுபோல இருக்கு, என்று சொல்லி விடுகிறாள். பிள்ளைகள் எல்லோரும் சிரிக்கிறார்கள். ராமசாமிக்கு அதைத் தாங்க முடியவில்லை. தன்னுடைய வீடு வந்தவுடன் உள்ளே ஓடி விட்டான்.

தாயம்மாளின் மூன்று பிள்ளைகளும் வீட்டிற்கு வருகிறார்கள். மறுநாள் தீபாவளி இவர்கள் மூவருக்கு மட்டும் புத்தாடைகள் ஜாதிக்காய் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. அதோடு ஒரு புது துண்டு ஒன்று மட்டும் இருந்தது. அவங்க அம்மா தாயம்மாவிற்கு புத்தாடை இல்லை. அன்று இரவு மழை பெய்து கொண்டிருந்தது. செல்லையா, தம்பையா இருவரும் வீட்டிற்கு வெளியே சிறுநீர் கழிக்க சென்றபோது, தாய் தந்தையை இழந்து அனாதையாக நின்ற சிறுவன் தன் அத்தை வீட்டிற்குச் செல்ல நினைத்து பயணம் மேற்கொண்ட போது இரவுப்பொழுதானதாலும், பசி வந்ததாலும் ராமசாமி வீட்டிலிருந்து தூக்கி வீசப்பட்ட எச்சில் இலைகளில் உள்ள பருக்கைகளை உண்பதைப் பார்த்து அவனை விரட்டி அடிக்கின்றனர். உடனே அங்கு வந்த தாயம்மாள் அந்த சிறுவனை வீட்டிற்குள் அழைத்து வந்து உணவு தந்து தன் பிள்ளைகளோடு சேர்த்து உறங்க வைக்கிறாள்.

மறுநாள் தீபாவளி அன்று தன் கணவருக்காக இருந்த அந்த ஒரே ஒரு புதுத் துண்டினையும் அந்த சிறுவனுக்குத் தருகின்றனர். ராமசாமி வீட்டில் புது மாப்பிள்ளை அவனது அக்காவின் கணவன் ராஜா தீபாவளி கொண்டாட வந்திருக்கிறார். புத்தாடைகளை அணிந்து கொண்டு வீதியில் விளையாட வந்த மங்கம்மாளிடம் ராமசாமி எங்கள் வீட்டிற்கு ராஜா வந்திருக்கிறார் என்று கூற போட்டி போடுவதாக எண்ணிக்கொண்டு உடனே மங்கம்மாளும் தனது வீட்டிற்கு வந்த அந்த சிறுவன் பெயரும் ராஜா என்பதால் எங்கள் வீட்டிற்கும் ராஜா வந்திருக்கிறார் வேணும்னா வந்து பாரு என்று சொல்கிறாள். இவ்வாறாக கதை முடிவு பெறுகிறது.

## பண்பாட்டுப் பதிவுகள்

“ராஜா வந்திருக்கிறார்” சிறுகதையில் தாயம்மாள் கதாபாத்திரம் தாய்மையின் இலக்கணமாக காட்சியளிக்கிறது. கருணை, அன்பு, இரக்கம் ஆகிய பண்புநலன்களைக் கொண்ட பெண்ணாக தாயம்மாள் காட்சி தருகிறாள். ஏழ்மையிலும் இரக்ககுணம் கொண்டவளாக திகழ்கிறாள். தனது மூன்றாவது பிள்ளை மங்கம்மாளைக் கொஞ்சுவதிலும், பிள்ளைகளைக் குளிப்பாட்டி, சோறூட்டி அன்பைத் தருவதிலும் தலைசிறந்தவளாகக் கருதப்படுகிறாள். வீட்டிற்கு யார் வந்தாலும்

அவர்களை உபசரிக்க வேண்டும், தாங்கள் உண்ணுவதை அவர்களுக்கும் தர வேண்டும் என்ற விருந்தோம்பல் பண்பாடு போற்றப்படுகின்றது.

## விருந்தை வரவேற்றல்

தொல்காப்பியம் **"விருந்தே புதுமை"** என்கிறது. புதிதாக தனது வீட்டிற்கு வந்த சிறுவனை அன்போடு அழைத்து வந்து பரிவோடு பாசம் காட்டுகிறாள்.

முகத்தானாம் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொல் இனிதே அறம் - (குறள்.93)

என்ற குறட்பாவிற்கிணங்க அந்த சிறுவனை கருணையோடு கண்ணோக்கி கனிவோடு அரவணைத்து ஆதரவளிக்கிறாள். வீட்டிற்கு வந்தவர் பகைவராய் இருந்தாலும் அவர்களை வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடு. பகைவர் இல்லையென்றாலும் தன் பிள்ளை போல் உள்ள அந்த சிறுவனை வரவேற்று உபசரிக்கும் தாயம்மாளின் அறப்பண்பு பாராட்டுதற்குரியது.

## விருந்து பரிமாறுதல்

உணவு வழங்கி உபசரிப்பது தமிழரின் தலையாய பண்பாகும். தானத்தில் சிறந்தது அன்னதானம் எனப்படுகிறது.

"தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" – ( பாரதியார் கவிதைகள்)

என்றார் பாரதியார். உயிர்வாழ்க்கைக்கு உணவே ஆதாரமாகின்றது. மழையில் நனைந்தபடி பசிக்காக ஏங்கி எச்சில் இலைகளில் சோற்றுப் பருக்கைகளைப் பொறுக்கி உண்ணக்கூடிய சிறுவனின் நிலை மிகவும் வேதனைக்குரியது.

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை" – (ஔவை.தனிப்பாடல்கள்)

என்றார் ஔவையார். நல்ல உணவினை வயிராற உண்ண வேண்டிய இளம்வயதில் ராஜா என்ற சிறுவன் பெற்றோரை இழந்து அனாதையாகி தனது அத்தை வீட்டிற்குச் செல்லுகின்ற வழியில் பசி மேலிட எச்சில் உணவினை உண்ணுகின்றான் அதனைக் கண்ட தாயம்மாள் அவனை அழைத்து வந்து தனது பிள்ளைகளுக்குத் தருகின்ற அந்த உணவையே அவனுக்கும் தந்து பசியாற்றுகிறாள்.

விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா மருந்தெனினும்
வேண்டற் பாற்று அன்று –(குறள்.82)

என்கிறது வள்ளுவம். இந்த சிந்தனை மரபினையுடையவளாக நிற்கிறாள் தாயம்மாள். அழுக்கு உடையோடு உடலில் காயங்களோடு காட்சி தருகின்ற அந்த குழந்தையையும் தன் குழந்தை போல் எண்ணுகின்ற நேரத்தில் தாயம்மாள் அன்னை தெரசா போலவே காட்சி தருகின்றாள்.

## விருந்தைக் கொண்டாடுதல்

குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை போர்த்தினான் கடையெழு வள்ளல்களில் ஒருவனான பேகன் என்னும் வள்ளல். அது போலவே தீபாவளி அன்று நீராடிவிட்டி ஆடையின்றி நின்ற அந்த ஏழைச் சிறுவனுக்கு தன்னிடம் தன் கணவனுக்கான இருந்த ஒரே ஒரு துண்டினையும் வழங்கி விருந்தைக் கொண்டாடினாள் தாயம்மாள். ஒரு மனிதனுக்கு உண்ண

உணவு, இருக்க இடம், உடுக்க உடை இவை மூன்றும் அடிப்படை தேவைகளாகும். அவற்றையெல்லாம் சற்றும் முகம் சுளிக்காமல் தயையோடு வழங்கிய தாயாக கருணைக்கடலாக தாயம்மாள் காணப்படுகிறாள்.

## பண்பாட்டைக் கற்றுத் தருதல்

சமுதாயத்தில் வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும், பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போல் எண்ண வேண்டும் ஆகிய சிந்தனைகளைத் தன் பிள்ளைகளுக்கு தனது செயல்பாட்டின் மூலமாக கற்றுத் தருகிறாள் தாயம்மாள். பகுத்துண்டு வாழ வேண்டும், பிறர் நலம் காக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனைகள் இவளின் நடவடிக்கைகளில் வெளிப்படுகின்றன. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது பழமொழி. பிள்ளைகளுக்கு இளம் வயதில் சொல்லித் தருகின்ற படிப்பினைகள் பசுமரத்தாணி போல் அவர்கள் மனதில் பதிந்து விடும். செல்லையா, தம்பையா, மங்கம்மாள் ஆகிய மூன்று குழந்தைகளோடு சேர்த்து ராஜாவையும் தனது பிள்ளை போல் எண்ணுகின்ற தாயம்மாளின் பாசம் தாய்மையின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

இவ்வாறாக அழகிய நடையில் தெளிந்த நீரோடை போல அமைந்துள்ள “ராஜா வந்திருக்கிறார்” சிறுகதை வாசிக்க வாசிக்க இன்பம் தருகின்றது. நவில்தொறும் நூல் நயம் என்ற குறளுக்கு இலக்கணமாக அமைந்துள்ளது. ஆசிரியர் தனது தாயாரை மனதில் வைத்து எழுதியிருக்கும் இச்சிறுகதை தாயின் அன்பினை, அக்கறையினை, அரவணைப்பினை எடுத்துக்காட்டுகின்றது. அன்னையின் கருணைக்கு அளவில்லை என்பதை வலியுறுத்துகின்றது. விருந்தோம்பல் பண்பாட்டினைப் போற்றுகின்ற வகையில் அமைந்துள்ளது. தன்னைப் போல பிறரையும் நேசிக்க வேண்டும் என்ற பண்பினைக் கற்பிக்கின்றது. சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகளைப் போற்றுகின்றது.

## துணைநூற் பட்டியல் (References)

1. அன்பளிப்பு சிறுகதைகள், அழகிரிசாமி கு. சக்தி காரியாலயம், சென்னை, 1952.
2. ஔவையார் தனிப்பாடல்கள், புலியூர் கேசிகன், மங்கை வெளியீடு, சென்னை, 2010.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 2008.
4. பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம், சென்னை, 1977.
5. திருக்குறள் தெளிவுரை, வரதராாசனார், மு. திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே. சாலை, சென்னை,1969.

© 2026 முனைவர்.உமாராணி க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..